விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-எட்டு **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை03 வெள்ளிக்கிழமை (17 .01.2003) தொலைபேசி~ 2223378 ஒலி~29

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் குடியமர்த்தப்படுவர்

# இரு நாள் உப குழுக் கூட்டத்தில் 11 தீர்மானங்களில் இணக்கம் !

## உலக வங்கியின் பிரதிநிதியும் பங்கேற்பு

(கிளிநொச்சியில் இருந்து நமது நிருபர்)

**வடக்குக் கிழக்கு உடனடி மனிதாபிமானத் தேவைகள் மற்றும் புனர்வாழ்வுக்கான உப குழுக் கூட்டத்தில் 11 முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**

**கடந்த இரண்டு தினங்களாக கிளிநொச்சி "சிரான்" அலுவலகத்தில் நடைபெற்ற இவ் உபகுழுக் கூட்டத்தில் ஆக்க பூர்வமான பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதுடன்,இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை ஒழுங்கு முறையில் மீளக்குடியமர்த்துவதிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி "சிரான்" அலுவலகத்தில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினரும் அரசின் சமாதான செயலணியின் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக்கா தலைமையிலான குழுவினரும் உலக வங்கியின் துணைத் தலைவர் மீக்கோ நிஸாமினி,உப குழுவின் பிரதான ஆலோசகர் யாசுஷி அகாஸி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றும் நேற்று முன்தினமும் சுமார் 11 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்ற கூட்டங்களின் போது வடக்குக் கிழக்குப் புனர்வாழவு நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்களை துரிதப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்களைத் தயாரிப்பது பற்றியும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இத்துடன் வடக்குக் கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் குடியமர்த்துவது தொடர்பாகவும், இணக்கம் காணப்பட்டுள்ளதுடன்மீளக்குடியமர்த்துவது தொடர்பாக

(08ம் பக்கம் பார்க்க)




## கேணல் கிட்டுவின் நினைவு தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட,வங்கக் கடலில் காவியமான பத்துப் போராளிகளினதும் 10ம் ஆண்டு நினைவு நாள்,நேற்று வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப்பிரதேசமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

வன்னிப் பெருநிலப்பரபில் கிட்டுப் பீரங்கிப் படையணியினரின் ஊர்திப் பவனியும் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

யாழ்.குடாநாட்டில் வடமராட்சி தீருவிலிலும்,வலிகாமத்தில் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலிலும்,அஞ்சலி நிகழ்வும் பொதுக்

(08ம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் சிப்பாய் சரண்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்துள்ளார்.

சரணடைந்த பிரஸ்தாபச் சிப்பாயை புலிகள் நேற்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் நேற்றுப்பிற்பகல் வவுணதீவில் வைத்து அச்சிப்பாயை இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ)

## அரச குழு பெல்ஜியத்தில்

(பெல்ஜியம்)

சமஷ்டி அரசமைப்பு பற்றி ஆராய்வதற்கென ஜேர்மனி சென்றுள்ள 9 பேர் அடங்கிய பாராளுமன்றக் குழுவினர் நேற்று பெல்ஜியம் சென்று அங்குள்ள அரசியல் கட்சித் தலைவர்களுடன் சமஷ்டி அமைப்புப் பற்றி கலநதுரையாடியதுடன் இன்று பெல்ஜியம பாராளுமன்றத்திற்கும் நேரில் விஜயம் செய்து இவ்விடயம் தொடர்பாக ஆராயவுள்ளதாக அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து ஜேர்மனி சென்ற பாராளுமன்றக் குழு

(08ம் பக்கம் பார்க்க)

## சதீஸ்நம்பியார் 31ம் திகதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்வதற்கு இம் மாதம் 31ம் திகதி இளைப்பாறிய முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் இலங்கைக்கு வரவுள்ளார்.

இவரின் வருகையை அடுத்து பிரித்தானிய இராணுவ அதிகாரி றோஸீம இலங்கை வரவுள்ளார்.

அடுத்த மாதம் 7ம் திகதி முதல் 10ம் திகதி வரை நடை பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்பதாக அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சதீஸ் நம்பியாரிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## மீள்குடியமர்த்தும் குழுவில் மேலும் 14பேருக்கு இடம்

(கிளிநொச்சி)

யாழ்.மாவட்டத்தில் மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்கு முன்னைய ஏழு பிரதிநிதிகள் உட்பட 21 பேர் அடங்கிய குழுஒன்றை நியமிப்பதற்கு கிளிநொச்சி சிரான் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் புதிதாக அரச பிரதிநிதிகளுக்கும்,புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்குமாக தலா ஏழுபேரை நியமிப்பதெனவும்,ஏனைய ஏழு பிரதிநிதிகள் தொடர்பாக எந்த விதமான முடிவுகளும் எட்டப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பொங்கு தமிழ் 2ம் ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் எழுச்சி பூர்வமாக ஆனுஷ்டிக்கப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவு இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழீழ சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ்மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய மாவட்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் கலந்து கொள்வர். (ந)

## முன்னாள் தளபதி நம்பியார் புலிகளின் ஆதரவாளர்!

### எச்சரிக்கிறது சிஹல உறுமய

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கையை அரசாங்கம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக் கருணாரத்தின அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.குடாநாட்டு உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிப்பதற்குஇலங்கை வரவுள்ள சதீஸ் நம்பியார் விடுதலைப் புலிகளின் ஆத்ரவாளர்.அவர் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாகவே அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் கருணாரத்தின மேலும் தெரிவித்தார். (வ)

## யாழ்.தே.க.கல்லூரிக்கு மேலும் 90 பேருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கல்வியியற் கல்லூரியின் 2003ம் ஆண்டிற்கு மேலும் 90 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதியை மனித வள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சின் கல்வியியற் கல்லூரிகள் கிளையின் பிரதம ஆணையாளர் ஏ.சி.எம்.இப்ராகிம் வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் ஆரம்பக் கல்விக்கு 60 பேரும்,சங்கீதத்திற்கு 13 பேரும,நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பத்துறைக்கு 17 பேரும் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம்,

(08ம் பக்கம் பார்க்)

## உலக வங்கி–புலிகள் குழு நேற்று வன்னியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

உலக வங்கியின் உயரதிகாரிகள் குழு நேற்று வன்னிக்குச் சென்று, அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள தமிழீழ அரசியல் துறை நடுவச் செயலகத்தில் பி.ப2.30மணியளவில் இடம் பெற்ற இச் சந்திப்பில்,உலக வங்கியின் உப தலைவர் டாக்டர் பீஹோமெஷ மிஷி, இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்,டாக்டர் நரேஸ் துரைசாமி ஆகியோரும் புலிகளின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,பொருளாதார நிபுணர் கலாநிதி ஜோய்

(08ம் பக்கம் பார்க்க)

# உள்ளக சுயநிர்ணயம் நாட்டைப் பிரிக்கும்

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள "உள்ளக சுயநிர்ணய உரிமை" என்ற கொள்கை சர்வதேச ரீதியில் இது வரை அங்கீகரிக்கப்படாததொன்று என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்தை அடுத்தே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுகளு ஆரம்பத்தில் பல தரப்பட்ட ஆலோசனைகளை ஜனாதிபதி முன்வைத்த போதும் அதற்கு

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்னும் ஒரு தகவல்

# இரண்டக நிலை

ஒருவர் இருக்கிறார். அவரின் வீட்டுக்கு நான் போயிருந்தேன். அவர் ஒரு மாதிரியான ஆசாமி. எந்த மாதிரியென்று கேட்கிறீர்களா? இதைத்தொடர்ந்து படியுங்கள் புரிந்துகொள்வீர்கள்! நான் போன சமயத்தில் அவரின் முன்னால் ஒரு தட்டில் வாழைப்பழமும், இன்னொரு தட்டில் அப்பிள் பழமும் இருந்தன. அவர் தன்பாட்டிடல் சும்மா உட்கார்ந்திருக்கிறார். ''ஏன் சாப்பிடவேண்டியது தானே! சும்மா உட்கார்ந்திருக்கிறீரகளே'' என்றேன். ''சாப்பிட வேண்டியது தான் எதைச் சாப்பிடுவது என்று தெரியவில்லை. அது தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார். ''அவை இரண்டிலும் உங்களுக்கு எது பிடிக்கும்?'' என்று கேட்டேன். ''இரண்டுமே பிடிக்கும்'' என்றார்.

''அப்படியென்றால் ஏதாவதொன்றை எடுத்துச் சாப்பிடுங்கள்'' என்றேன். ''அதுதான் இப்போது யோசனை! எதனை முதலில் எடுப்பது? என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார். அந்தச் சமயத்தில் அவருடைய சம்சாரம் அந்தப் பக்கமாக வந்தார் ''இவர் எப்போதும் இப்படித்தான். எதைத் தேர்ந்தெடுப்பது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் அந்த இரண்டு பழங்களும் அழுகிப்போய்விடும்! அதன் பின்னர் நான் சுலபமாக ஒரு முடிவுக்கு வந்துவிடுவேன். அதன்படி நடந்து கொள்வேன்'' என்றார்.

''என்ன செய்வீர்களென்று கேட்டேன், அழுகிப் போன அந்த இரண்டு பழங்களையும் எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவேன்'' என்றார். ஏன் அந்தக் காரியத்தை ''அவரே செய்ய மாட்டாரா?'' என்றேன். ''செய்வார்! ஆனால் அதிலும் ஒரு சிக்கல். அவர் எடுத்துக்கொண்டு போவார். அங்கே இரண்டு குப்பைத் தொட்டி இருக்கும். எந்தத் தொட்டியில் போடுவது என்று யோசித்துக் கொண்டே இருந்து விடுவார்'' என்றார். ''இதுபோன்ற ஆசாமிகளைப் பற்றி இன்று ஒரு தகவலில் கொஞ்சம் சொல்லக் கூடாதா'' என்றும் அந்த அம்மா கேட்டுக் கொண்டார்கள். அதன் விளைவு தான் இது.

இதுமாதிரி ஒரு நிலையைத் தான் Dilemma என்று சொல்கிறார்கள். அதாவது இரண்டக நிலை அந்த ஆள் ஓர் இரண்டும் கெட்டான் என்று சொல்கிறோம் அல்லவா? அதுதான் இது. சரியாக ஒரு முடிவுக்கு வரமுயாததனால் அந்த அப்பிள், வாழைப்பழம் இரண்டுமே கெட்டுப் போயிற்றல்லவா? அப்படி இரண்டு சந்தர்ப்பங்களையும் (ehanee) கெடுத்துக் கொள்கிறவன் இரண்டும் கெட்டான்.

நம்மிலும் பலருக்கு இந்தப் பட்டம் பல சமயங்களில் பொருந்தும். இரண்டக நிலை ஏற்படுவதற்கு எப்போதும் நாம் தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது. சூழ்நிலையே அப்படி அமைந்துவிடும். இப்பொழுது உங்களையே எடுத்துக் கொள்வோமே! நீங்கள் இந்த இரண்டக நிலைக்கு எல்லாம உட்படாத ஆள் என்று வைத்துக் கொள்வோம். மிகவும் உறுதி! நீங்கள் தனியாக ஒரு காட்டுவழியாக வந்து கொண்டிருக்கிறீர்கள். அப்போது ஒரு திருடன் உங்கள் முன்னால் வந்து நிற்கிறான். அவன் கையில் ஒரு குச்சி இருக்கிறது. சாட்டையும் இருக்கிறது. அவன் உங்களைப் பார்த்து, குச்சியால் அடிக்கவா? சாட்டையால் அடிக்கவா? என்று கேட்கிறான். நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்? அதுமாதிரி நிலைதான் இரண்டக நிலை. அதாவது நம்முன் இருக்கிற மாற்று வழியில் அல்லது விஷயங்களில் எதைத் தெரிவு செய்வதென்று திண்டாடினால் அதுதான் Dicemma.

இரண்டும் கெட்ட நிலை என்று சொல்கிற பொழுது பொதுவாக நம் முன் உள்ள இரண்டு விஷயங்களும் கெட்டதென்று சொல்லுவார்கள். ஆனால் தர்க்க இயலில் அப்படி இல்லையாம். இரண்டக நிலை என்பது நல்ல விஷயங்களிலும் வரலாம் என்று தர்க்க இயல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். இப்பொழுது ஒரு பையன். அவனுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கிறது. கோயம்புத்தூரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணமுடியும். யாரைத் தெரிவு செய்வது?'' இதுவுமோர் இரண்டக நிலைதான். இது மாதிரி நிலமையில் என்ன செய்யலாம்? இருக்கவே இருக்கிறது பூவா தலையா? போட்டுப் பார்த்துவிடவேண்டியது தான். இல்லாவிட்டால்சீட்டுக்குலுக்கிப் பார்த்து விடவேண்டியதுதான்.

கல்யாணத்தைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. அதாவது திருமணம் என்பது ஒரு கோட்டை. உள்ளே இருக்கிறவர்கள் வெளியே வருவதற்கு ஆசைப்படுகிறார்கள். வெளியே இருக்கிறவர்கள் உள்ளே போக ஆசைப் படுகிறார்கள். இதற்கு என்ன அர்த்தம், கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் கஷ்டம். பண்ணவில்லை என்றாலும் கஷ்டம். ஆனால் மனிதன் இரண்ட நிலைகளில் ஏதாவது ஒன்றிலே தான் இருக்க வேண்டும்.

இது மாதிரி இரண்டக நிலை (Delemma)யிலே வெகு நாட்களாக இருந்து கொண்டிருந்த சிநேகிதன் ஒருவனைச் சமீபத்தில் பார்த்தேன். ''ஏனப்பா இப்பொழுது நீ கோட்டைக்கு உள்ளே இருக்கிறாயா? வெளியே இருக்கிறாயா? என்று கேட்டேன், அவன் மெதுவாக ''கோட்டை மதில் சுவருக்கு'' மேலே உட்கார்ந்திருக்கிறேன்'' என்றான் எந்தப் பக்கம் குதிக்கப் போகிறானோ? யாருக்குத் தெரியும்?

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# நிர்வாக மறுசீரமைப்பின்மையே வேலையின்மைக்குக் காரணம்

(கொழும்பு)

நிர்வாகத்துறையை மறுசீர மைப்பதன் முலம் வேலைவாய்புத் தொடர்பான பிரச்சினையை தீர்க்க முடியும் என்று வர்த்தக சம்மேள னத் தலைவர் திஸங்கபைஸா தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறு கையில், இலங்கையில் வேலை யில்லாமல் இருக்கும் யுவதிகளில் ...ளாசிப் பேர் 20வயதிற்கு 25வய திற்கும் இடைப்பட்டவர்கள்.

இவர்களில் பெரும்பான்மையினர் கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்.

எனவே, இவர்கள் அனைவரிற்கும் அரசாங்கம் மாத்திரம் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முடியாது. தனியார் துறையினரும் இணைந்தால்தான் இவ்வேலை யில்லாப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-10)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின பின் புலிகளுடன் 7763பேர் இணைவு

## ஜே.வி.பி.சார்பு இணையத் தளம் தகவல்

(கொழும்பு)

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன் படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 7ஆயிரத்து 763பேர் இணைந்துள் ளனர்.

இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்திருப்பதாக ஜே.வி.பி.சார்பு இணையத்தளம் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

அவ் இணையத்தளச் செய்தி யில் மேலும்,

இவ்வாறு இணைந்தவர்களில் பெண்களும், கணிசமான பங்கு வகிக் கின்றனர்.

சுமார் 10ஆயிரமாகக் காணப்பட்ட புலிகளின் ஆளணி இதன் மூலம் தற்போது 17ஆயிரமாக உயர்வடைந் துள்ளது.

இவ்வாறான நிலைமை தொடர்ந் தால் எதிர்வரும் 2005ஆம் ஆண்ட ளவில் புலிகளின் ஆளணி 30ஆயிரமாக உயர்ந்து விடும்.

இது தவிர, இக்காலப் பகுதி யில் ஆறு கப்பல்களில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வந்திருப்பதன் மூலம் தமது படைக் கல பலத்தையும் பல மடங்காக உயர்த்தியுள்ளனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

# பெண்கள் மீதான வன்முறை கடந்த ஆண்டுகளில் அதிகரிப்பு

## அமைச்சர் அமரா பியசீலி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த சில ஆண்டுகளாக சிறு வர்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறைகளும் துஷ்பிரயோகங் களும் அதிகரித்துள்ளதாக மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.

இவற்றைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படா விட்டால் சமூகம் சீரழந்து விடும்.

பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகம் வரையும், வீட்டில் இருந்து வேலைத்தளம் வரையும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறை கள் கட்டவிழ்க்கப்படடு வருகின்றது.

ஆபாச வெளியீடுகள், விளம்பரங் கள் என்பனவே இந் நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது.

இத்தகைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுவோர்களின் மனநிலை பாதிப்பு வாழ்நாள் முழுதும் நீடித்து இருப்பதால் இவ்வாறான சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பினை நிறுத்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித் துள்ளார். (உ-10)

# ஆசிரியர்களுக்கு இலவச சீருடை

(கொழும்பு)

அறநெறிப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ் வாண்டு முதல் இலவச சீருடைகள் வழங்கப்படவுள்ளன என அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள் ளார்.

வேதனம் எதுவுமின்றி பணி புரியும் ஆசிரியர்களைக் கௌரவிக் கும் முகமாக பௌத்த, இந்து, கிறிஸ் தவம் என்ற பாகுபாடின்றி அவரவர் சமய கலாசாரத்திற்கு ஏற்ப இச் சீருடைகள் அமையும் என மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் நாளை திறப்பு

(சுதுமலை)

யாழ். நல்லூர் வீதியில் இயங் கிவந்த பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கி மேற்தரக்கிளைக்கு அண்மை யில் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இந்தப் புதிய பணிப்பாளர் அலுவல கத்தை சுகாதாரசேவைகள் நலன்புரி போசாக்கு நலன்னோம்பு அமைச் சின் செயலாளர் டாக்டர் எஸ்.ரெஜி பெரேரா நாளை காலை 9.30மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வு யாழ்ப்பாணம் சுகா தார சேவைகள் பிரதி மாகாணப் பணிப் பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-252)

# ஜயவர்த்தனபுர பல்கலை மீண்டும் திறப்பு

(கொழும்பு)

மூடப்பட்ட ஸ்ரீஜயவர்த்தனபுர பல் கலைக்கழகம் மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை திறக் கப்படவுள்ளது.

மாணவர் ஒருவர் கொல்லப்பட் டதை அடுத்து கடந்த ஆண்டு இப்பல் கலைக்கழகம் மூடப்பட்டது குறிப் பிடத்தக்கது. (உ)

## இராசி பலன்

**17. 01. 2003**

**(தை 3, வெள்ளி)**

| | |
|---|---|
| சதுர்த்தசி | - பி.ப 5.10வரை |
| திருவாதிரை | - பி.ப 3.25வரை |
| இராகுகாலம் | 11.05 - 12.35 |
| சுபநேரம் | 6.35 - 8.05 |

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், இனிய அனுபவம், வாக்கு மேன்மை, சகோதரர் உதவி.

**இடபம்**
நிலைமாற்றம், மாதர் நட்பு, தொழில் கஷ்டம், காரிய தாமதம்

**மிதுனம்**
நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, குடும்ப சுகம், வாக்குப் பலிதம்.

**கடகம்**
கோப்பப்படுதல், தந்தை வழி உறவு, எதிர்பாராத நன்மை, சுபசெலவு

**சிங்கம்**
தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, கௌரவம், தெய்வதரிசனம்.

**கன்னி**
அதிகாரம், கடின முயற்சி, பிறர் உதவி, போசன சுகம்.

**துலாம்**
ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், மனச் சஞ்சலம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், போசன சுகம், உடல் நலக்குறைவு, சகோதரர் உதவி

**தனுசு**
காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, தெய் தரிசனம், செய்தொழில் விருத்தி.

**மகரம்**
நல்ல சம்பவம், தேக ஆரோக்கியம், திடீர்ப்பயணம், எதிர்பாராத நன்மை.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், எடுத்த காரியம் தாமதமாகும், சயன சுகக்குறைவு, தொழில் சிறப்பு.

**மீனம்**
பயந்த சுபாவம், அதிகாரிகள் ஒத்தாசை, வாகன சுகம், முயற்சி கைகூடும்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

## காவலூர் பி.செ.பிரிவில்

# குடியிருப்பாளர் விபரம் திரட்டலில் படையினர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ள குடியிருப்புக்களின் விபரங்கள் இலங்கைக் கடற்படை யினரால் திரட்டப்பட்டு வருகின் றன.

மேற்படி பிரதேசசெயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மொத்தக்குடியிருப்புக்களின் எண்ணிக்கை, தற்போது குடியிருக் கும் வீடுகள், குடியிருக்காத வீடுகளின எண்ணிக்கைகள் என்பன இலங்கை கடற்படையின் வேலணைக் கட்டளை முகாம் பொதுசனத் தொடர்பு அதிகாரியினால் திரட்டப்படுகின்றது.

கிராம அலுவர்களிடம் இருந்தே கட்ற்படையினர் இவ் விபரங்களை பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(உ-75)


## மக்கள் திலகம்

### அமரர் டாக்டர் எம். ஜீ.ஆர்

அவர்களின்

### 86ஆவது பிறந்தநாள் நினைவுப் பூக்கள்

இலங்கையில் பிறந்தது 17 ✡ 01 ✡ 1917



இந்தியாவில் உதிர்ந்தது 24 ✡ 12 ✡ 1987

*அண்ணா கண்டெடுத்த அன்புக்கனி மறைந்ததுவா? இல்லை இல்லை தன் நாடு விட்டு பொன்நாடு சென்றதோ வழியனுப்பி வணங்குகின்றோம்.*

ஓம் சாந்தி !



புரட்சித் தலைவர் நாமம் என்றும் வாழ்கவே !

எம்.ஜி.ஆர் திருமண இணைப்பாளர்,
வே.புண்ணிய மூர்த்தி.

*எம்.ஜி.ஆர்.அகம்,
புத்தூர் சந்தி,
மீசாலை.*

[C/6456]

# வடக்கு-கிழக்கை ஒன்றாக்க ஒருபோதும் அனுமதியோம்

## முன்னாள் பிரதமர் ஓங்கிக் குரல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை ஒன்றாக இணைப்பதற்கோ அல்லது நாட்டை பிளவுபடுத்துவதற்கோ ஒரு போதும் அனுமதிக்க கூடாது என முன்னாள் பிரதமரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 'தாய் நாட்டைக் காப்போம்' என்ற அமைப்பின் தலைமை அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கா தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரே கொடியின் கீழ் அனைத்து இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

அதேவேளை, வடக்கு-கிழக்கை ஒன்றாக இணைப்பதற்கோ அல்லது நாட்டைப் பிளவு படுத்தவோ எவரும் அனுமதிக்க கூடாது என்றார். (உ-10)

### தையல் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் வேலணைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி இவ் வருடம் சரவணைப் பகுதியில் இடம்பெறவுள்ளது. (உ-75)

## பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் சில ஆனந்தராஜாவிடம்

(கொழும்பு)

சுயாதீன தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களில் சிலவற்றை பொலிஸ்மா அதிபர் ரீ ஆனந்தராஜாவிற்கு இம் மாத இறுதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபய சூரிய தெரிவித்துள்ளார்.

36ஆயிரம் பேரைக் கொண்ட பொலிஸ் திணைக்களத்தின் சகல நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் இல்லை.

இதன் காரணமாகவே சில அதிகாரங்களை பொலிஸ்மா அதிபரிற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இவ் அதிகாரங்களை பொலிஸ்மா அதிபரிற்கு வழங்கியதாகவும் இதுகுறித்து பொலிஸ்மா அதிபர் ரீ ஆனந்தராஜவுடன் ஏற்கனவே கலந்துரையாடியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

### சிறுவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

(தென்மராட்சி)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் இன்று அறவழிப் போராட்டக்குழுவில் சிறுவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி, இணைப்பாளர் எஸ் இன்பரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சியில் 40 சிறுவர்கள் பங்குபற்றவுள்ளனர். (உ-77)

## அமைச்சர் ரவி பெப்ரவரியில் பாகிஸ்தான் பயணமாவார்

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கா அடுத்தமாதம் பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார்.

இலங்கையும்-பாகிஸ்தானும் கைச்சாத்திடவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைபற்றி இவர் அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராயவுள்ளதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுலாகியபின்னர் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, தைக்கப்பட்ட ஆடைகள் என்பனவற்றை விற்பனைசெய்யக்கூடிய சிறந்த சந்தைவாய்ப்புக்களை பாகிஸ்தானில் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானிலிருந்து விவசாய உற்பத்திகளை இலங்கைக்கு கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டு அவற்றை இலங்கைக்கு இறக்குமதிசெய்வது தொடர்பாக இச் சுற்றுப்பயணத்தின்போது தீர்மானிக்கப்படவுள்ளது (உ-10)

## காணாமல் போனோர் பற்றிய மேலதிக விபரங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பணியகம் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த காணாமல் போன 23 பேர் தொடர்பான மேலதிக விபரங்களைக் கோரியுள்ளது.

விரிவான விசாரணைகளை நடத்தும் வகையில் மேற்படி 23 பேர் தொடர்பாக பந்துல குலதுங்க தலைமையில் இயங்கும் ஆணைக்குழுவிற்கு விசாரணை இலக்கம் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 11பேர் இந்தவிபரம் கோரப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

- க. செந்தில்குமார்-யாழ்ப்பணம்.
- க ஜெயவீரசிங்கம்-ஆழியவளை, தாளையடி.
- சு லே கோதன் - ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை
- ரா. கேதீசன் - நாகர் கோவில் மேற்கு
- ரா. குணரட்ணம்-நாகர் கோவில்.
- பெ. முருகையா-நாகர் கோவில்.
- கு ரட்ணகுமார் - ஆதி கோவிலடி.
- தி. திரவியராசா - கரவெட்டி மேற்கு.வடமராட்சி
- ப. செந்தில்வேல் - ஆதி கோவிலடி.
- ரொபேட் கெனடி ராஜ - குருநகர், யாழ்ப்பாணம்.
- அந்தோனிப்பிள்ளை-மாதகல். (உ-3)

## மகாபொல கொடுப்பனவு பெறுவோர்தொகைகுறைப்பு

(கொழும்பு)

மகாபொல புலமைப் பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையைக்குறைக்கவேண்டியநிலை ஏற்பட்டிருப்பதாக புலமைப் பரிசில் நிதியப் பணிப்பாளர் ஷர்மிலா பெரேரா தெரிவித்துள்ளார்.

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து இதுவரை நிதிகிடைக்காமையினாலேயே இந்நிலை எழுந்துள்ளதாக தெரிவித்த ஷர்மிலா மேலும் கூறுகையில்,

7 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கிடைக்காத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி நிதிய அதிகாரிகள் ஆகியோருக்குகடிதமூலம் அறிவிக்கப்பட்டபோதிலும் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

1988 ஆம் ஆண்டில் இருந்து 2002 ஆம் ஆண்டு வரை புலமைப் பரிசிலுக்கு வழங்க வேண்டிய பணத்தில் இருந்து 25 வீதமான பணமே கிடைத்திருக்கிறது.

முன்னைய வருடங்களிலும் இவ்வருடத்திலுமாக மொத்தம் 500 மில்லியன் ரூபா ஜனாதிபதிநிதியத்தில் இருந்து மகாபொல புலமைப்பரிசிலுக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார். (உ)

## மகளிர் தினத்தை ஒட்டி மாணவர் மட்டப் போட்டி

(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் விவகார அமைச்சினால் பாடசாலை ரீதியில் கட்டுரைப் போட்டியும் மற்றும் மகளிருக்கான விளம்பரப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

கட்டுரைகள் பாடசாலையூடாக அனுப்பப்பட வேண்டும். விளம்பர ஆக்கத்தின் பின்பக்கத்தில் பிறந்ததிகதி, தனிப்பட்டமுகவரி மாவட்டம் என்பனகுறிப்பிட்டு பெப்ரவரி 15 ஆம்திகதிக்குமுன்னராக செயலாளர், மகளிர் விவகார அமைச்சு, இல 177, நாவல வீதி, நாரஹேன்பிட்டிய கொழும்பு 05 என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். (உ-3)

### பல்கலையில் இன்று கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் நிகழ்வின் 2ம்ஆண்டு நிறைவையொட்டி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தும் தமிழீழ போராட்டவரலாற்று கண்காட்சி இன்று மு ப 11மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொதுஅறையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளைஇன்று பி ப 3 மணியளவில் பொங்குதமிழ் நிகழ்வின் 2ம் ஆண்டுநிறைவு நிகழ்வுகள் கைலாசபதிகலையரங்கில் நடைபெறவுள்ளது. (த)

### விவசாயக் குழுக்கூட்டம்

யாழ் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி மு ப. 10 00 மணிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் செ பத்மநாதன் தலைமையில் அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது (உ-77)

## நம்பிக்கை நிதியம் அமைப்பதுகுறித்து ஆராய்வு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்குஆதரவுவழங்குப்நோக்குடன் நம்பிக்கை நிதியம் ஒன்றை அமைப்பதுதொடர்பாக உலகவங்கி ஆராய்ந்து வருகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கத் தரப்பினரும் விடுத்த வேண்டுகோளினை அடுத்தே இது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக உலகவங்கி அண்மையில் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது (உ-8)

## 9 கோடி செலவில் யாழில் நவீன வசதிகள் கொண்ட நீதிமன்றக் கட்டடம்

(கொழும்பு)

உலக வங்கியின் நிதிஉதவியுடன் யாழ் குடா நாட்டில் 9கோடிரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட நீதிமன்றக்கட்டடம் ஒன்று அமைக்கப்படும் என நீதியரசர் சரத் நந்தன சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உலக வங்கியின் 70 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் அமைக்கபபடவுள்ள நீதிமன்றக்கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே பிரதமநீதியரசர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில மாதங்களில் யாழ் நீதிமன்றக் கட்டட அடிக்கல் நட்டப்படும் என உலகவங்கியின் சட்டம் மற்றும் நீதித்துறை சீர்திருத்த செயற் திட்டத்தின் திட்டப் பொறியியலாளர் சமந்த பி. விஜயசுந்தர தெரிவித்துள்ளார்

வடக்கு-கிழக்கு மாகாணவரலாற்றில் இவவாறுபெருமளவு நிதிஉதவியுடன் இரு நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் ஏககாலத்தில் அமைக்கப்படவுள்ளமை இதுவே முதல்தடவையாகும்.

இதேவேளை, உலகவங்கியின் 70 இலட்சம் ரூபாநிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது (உ)

# எமது அனைத்துச்செயற்பாடுகளிலும் வட-கிழக்கிற்கே முன்னுரிமை

## சாமுவேல் அன்சன்ஸ் நிறுவன அதிகாரி

(யாழ்ப்பாணம்)

80 வருடங்களுக்கு மேலாக வடபகுதி மக்களின் அபிமானத்தையும் நல்ல வரவேற்பையும் பெற்ற எமது நிறுவனத்தினால் மேற் கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளிலும்வடக்கு-கிழக்கு இளைஞர்களுக்கே முழுமையானசந்தர்ப்பம் வழங்கப்படும் என்று சாமுவேல் அன்சன்ஸ் கம்பனி லிமிடெட் நிறுவன நிறைவேற்று அதிகாரி டேவிட் செல்வரத்தினம்இவ்வாறுகுறிப்பிட்டார்.

சாமுவேல்அன்சன்ஸ்கம்பனி லிமிடெட் ஹிரியுமன் டயகனஸிக் சேவைகள் ஆலோசனைப் பிரிவு, ஹெலத்கெம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஆரம்பவிழா நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம் பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய டேவிட் செல்வரத்தினம்மேலும் கூறியதாவது,

எத்துறையைச் சேர்ந்தவர்களாயினும், அத்துறை சார்ந்த சந்தைப்படுத்தல் நுட்ப அறிவினைக் கொண்டிருப்பதால் மட்டுமே இன்றைய நிலையில் மிக உயர் நிலையை அடைய முடியும்.

இளைஞர்களை பொறியியல் துறையில் பயிற்றுவித்தல், மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தல், வடமாநிலத்தை மீளக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு புதிய வளத்துடனும் வல்லமையுடனும் எமது பணிகளை விரிவுபடுத்தியுள்ளோம் என்றார்,

மேலும், பொறியியலாளர்களுக்கு ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து நிபுணர்களை வரவழைத்து மேலதிக பயிற்சிகளை வழங்குவுள்ளோம் என்றும் தெரிவித்தார். (உ)

அமெரிக்க- வடகொரிய அணு ஆயுதசிக்கல்

# நிலைமை மோசமடையாதிருக்க தெ.கொரியா இரட்டிப்பு முயற்சி

(சியோல்)

வடகொரியாவின் அணு மற்றும் அணுவாயுத அபிவிருத் தித்திட்டம் காரணமாக எழுந்துள்ள ஆபத்தான நிலைமைக்கு அவச ரமும் அமைதியுமான தீர்வொன் றைக் காண்பதற்கு தனது ராஜ தந்திர முயற்சிகளை இரட்டிப் பாக்குவதற்கு தென்கொரிய அரசு முடிவு செய்யதுள்ளது.

வடகொரிய அணு ஆயுதத்திட்டம் காரணமாக எழுந்துள்ள நிலைமைகள் குறித்து சியோல் அதிகாரிகளுடன் ஆராய் வதற்காக அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ் கெல்லி ஏற்கனவே சியோல் வந்து சேர்ந்துள்ளார்

வடகொரியாவுக்கும் அமெரிக்காவக்குமிடையில் தற் பொழுது ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமை குறித்து தென்கொரிய புதிய அதிபர் ரொஹ்-ஹொங் உடனும் வெளியுறவு அமைச்சர் சொய் சவ் - ஹொவ் உடனும் திரு கெல்லி ஆலோசனைகளை நேற்று ஆரம்பிக்கவிருந்தார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்த அமெரிக்கா நடவடிக் கைகளை எடுக்காத பட்சத்தில் நீண்ட தூர இலக்குகளைத் தாக் கவல்ல ஏவுகணை சோதனை களை ஆரம்பிக்கப் போவதாக வடகொரியா ஏற்கனவே அச்சுறுத் தியுள்ளது. அத்துடன் அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து வட கொரியா தன்னை விடுவித்துக் கொண்டதாக அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் பொருத்தமான நாடுக ளுடன் தொடர்புகொண்டு வடகொ ரியாவின் இப்போதைய நடவடிக் கைகளால் நிலை மேலும் மோசம டையாதவாறு பார்த்துக்கொள்ளத் தனது முயற்சிகளை வேகப்படுத் தப்போவதாக தென்கொரிய வெளியுறவு அமைச்சர் தெரிவித் துள்ளார்.

வடகொரிய அணுஆயுத விடயத்தை ஆலோசிப்பதற்காக ஐ.நா பாதுகாப் புச்சபை கூடுவதற்கு முன்பதாக அமெரிக்காவையும் வடகொரியா வையும் பேச்சுவார்ததைகளை ஆரம்பிக்கச் செய்வதற்கு முயற்சி களை மேற்கொள்ளும்படி உலக நாடுகளை தென்கொரியா வற்புறுத தப் போவதாகவும் அவர் தெரிவித் தார். (பி)

## தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த பொடாச்சட்டம் பயன்படுத்தப்படும்

### தமிழக அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

தமிழகத்தில் தீவிரவாதத் தைக் கட்டுப்படுத்த பொடாச் சட்டத்தைப் பயன்படுத்த போவதாக தமிழக அரசு அறிவித் துள்ளது.

அனுமதியின்றி ஆயுதங்கள் வைத்திருப்போர் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்க ளென்த் தமிழக அரசு நேற்று ஆளுநர் மூலம் அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்வாறு கைது செய்யப்படுபவர்களுக்கு ஆயுள் தண்டனையும், 10இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படுமென்று, வெடிப்பொருட்கள் மற்றும் ஆயுதங் களை வைத்திருக்க உதவுபவர்களுக் கும் தண்டனை வழங்கப்படுமென மேலும் தனது அறிவிப்பில் தமிழக அரசு கூறியுள்ளது. (பி-2)

## யு-எஸ் - ஈராக் பிரச்சினையில் ஈரான் பக்கசார்பு காட்டாது

(தெஹரான்)

ஈராக் - அமெரிக்காவிற்கிடை யில் தற்போது எழுந்துள்ள பிரச் சினைகள் குறித்து ஈரான் பக்கசார்பாக நடந்து கொளள்ள மாட் டாது என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் 1979ஆம் ஆண்டு நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் அமெரிக்கா, ஈராக் ஆகிய இரண்டு நாடுகளும் ஈரானைத் தங்களது எதிரிநாடாகவே கருது கின்றன.

இதனால், ஈரான் மேற்குறிப்பிட்ட இரண்டு நாடுகளுக்கும் இடையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து பக்கசார்பாக நடந்து கொள்ளப் போவ தில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## ஆர்ஜன்டீன முன்னாள் சர்வாதிகாரி மரணம்

(புவனஸ் அயர்ஸ்)

1982 இல் போக்லன்ட் தீவுகள் மீது போர் தொடுத்துவரும் ஆர்ஜன்டீனாவின் முன்னாள் சர்வா திகாரியுமான ஜனரல் லியோ போல்டோ கல்டீரி, கடந்த ஞாயி றன்று இருதய நோயினால் மரண மானார். இவர் ஆட்சியின்போது ஆர்ஜன்டீனாவில் ஆயிரக் கணக் கானவர்கள் காணாமல் போன தாகக் கூறப்பட்டது.

76 வயதான கல்டீரி பித்தப்பைப் புற்று நோயினால் பீடிக்கப்பட்டி ருந்தார். 1976 ஆம் ஆண்டிலிருந்து இவர் ஆர்ஜன்டீனாவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் ஏறத்தாழ 30 ஆயிரம் மக்கள் இராணுவக் கொடுமைக்கு உள் ளாக்கப்பட்டு கொல்லப்பட்டதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. 1982 இல் போக்லாந்து தீவுகள் மீது போர் தொடுத்த இவர் அதில் தோல்வி கண்டார். (பி)

### உலக தரிசனம்

### இந்திய அமைச்சர் அவையில் மாற்றம்

(புதுடில்லி)

இந்திய அமைச்சரவை இம்மாத இறுதிக்குள் மாற்றியமைக்கப் படலாமென எதிர்பார்க்கப்படு கின்றது.

இந்த அமைச்சரவை மாற்றத் தின் போது வெளியுறவு அமைச்சர் யத்வத்சிங்ஹா உட்படப் பலரின் அமைச்சர் பதவிகளில் மாற்றம் செய் யப்படலாமென மத்திய அமைச்சின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற் கோள் காட்டி இந்திய பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள் ளது. (பி-2)

## இரசாயன ஆயுதம் கொண்டுதாக்குவோம்

(நிக்கோஸியா)

வடஈராக்கிலுள்ள தலிபான் பாணியிலான அன்சார் அல்-இஸ் லாம் என்னும் சிறு ஆட்சியின் புதிய தலைவர் முல்லா மொகமது ஹாஸன் என்பவர் சதாம் ஹுசைனுக்கு எதிராக அமெரிக்கா போர் தொடங்குமானால் தங்களிடமுள்ள றெசின் முதலிய இரசாயன ஆயுதங்களை அமெரிக்க இராணுவத்துக்கு எதிராகப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தியுள்ளனர்.

மேற்குறித்த பிரதேசத்தில் இரசாயன ஆயுதங்கள் சோதிக்கப்பட்டு வருவதாகக் கருதப்படுகின்றது. பல அல்கெய்டா தாக்குதல்களை திட்டமிட்டு நடத்தியவர் என்று கருதப்படும் முஸாரப் அல்சார்க்காவி என்பவ ருக்கு முல்லாஹுசேன் அடைக் கலம் வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

குர்திஷ் எல்லையிலிருந்து அமெரிக்கா ஈராக் பகுதிக்கு இராணுவத்தை நகர்த்தும் பட்சத்தில் அவர்கள் மீதான இந்தக் குழுவின் இரசாயனத் தாக்குதல் அமெரிக்கத் திட்டங்களை வெகுவாகப் பாதித்துவிடும் என்று அஞ்சப்படுகின்றது. (பி)

### சின்னம்மையை தடுக்க ஜேர்மன் நடவடிக்கை

(பேர்லின்)

ஜேர்மனியில் சின்னம்மை நோயைத் தடுக்கும் வகையில் அந்த நாட்டின் அரசாங்கம் சுமார் 100 மில்லியன் சொட்டு சின்னம்மைத் தடுப்பு மருந்துகளைக் கொள்வனவு செய்யவிருப்பதாக ஜேர்மன் சுகா தாரஅமைப்புக் கூறியுள்ளது.

தற்போது உலகலாவிய ரீதியில் அதிகரித்து வரும் சின் னம்மை வைரஸ் நோயைக் கட்டுப் படுத்தும் முகமாகவே ஜேர்மன் இந் நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது. (பி-2)

## ரஷ்ய பிரதி அமைச்சர் வடகொரியா விஜயம்

(மொஸ்கோ)

வடகொரியாவுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தணிக்கும் வகையில் ரஷ்யாவின் பிரதிவெளிவிவகார அமைச்சர் அலெக்ஸ்சாண்டரை விசேட தூது வராக ரஸ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அனுப்பிவைக்கவுள்ளார்.

வடகொரியாவுக்குச் செல்ல வுள்ள அலெஸ்சாண்டர் வடகொரிய விஜயத்தை முடித்துக்கொண்டு சீன, அமெரிக்கா ஆகிய நாடுக ளுக்குச் சென்று இப்பிரச்சினை யைத் தீரத்துவைப்பார், என ரஷ்யப்பாதுகாப்பமைச்சர் ஷேஜிஜ வானோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனா சென்றுள்ள அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் ஜேம்ஸ் ஹெலி சீன அதிகாரிகளுடன் பேச்சவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சு வார்த்தையின் போதுவடகொரியாவுடனான பிரச்சி னைகள் குறித்தே பெரும்பாலும் கலந்தாலோசிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (பி-2)



குளிர்காலம் விடைபெறுவதையொட்டி பஞ்சாபில் லோகிரி என்ற திருவிழாக் கொண் டாடப்பட்டத்தின் போது அந் நகர மக்கள் மகிழ்ச்சியில் ஆடிப்பாடுவதைக் காணலாம்.

## சதாம் தயங்கினால், தகுந்த பதில் கொடுக்க வேண்டும்

யு.எஸ். பிரிட்டனுக்கு ஆஸ் வற்புறுத்து

(கான்பெரா)

ஆயுத சோதனையாளர்களுக் குத் தேவையான பூரண ஒத்து ழைப்பை வழங்க ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பின்வாங்கினால் அதற்கு எதிராக தகுந்த பதிலொன்றை ஈராக் ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டுமென அவுஸ்திரேலியா அமெரிக்காவையும், பிரித்தானியா வையும் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரித்தானி யாவிற்கு ஆதரவாக அவுஸ்திரேலியா தற்போது விடுத்துள்ள இக்கருத்து ஈராக் மீதான தாக்குதல் அச்சத்தை மேலும் அதிகரித்துள்ளது.

எனினும், அமைதியான முறை யில் ஈராக்கில் நடைபெற்றுவரும் ஆயுத சோதனைகளை ஒருபோதும் குழப்பப் போவதில்லை என அவுஸ் திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலக்ஸாண்டர் டவுனர் கூறியுள் ளார். (பி-2)

## இடைக்காலஅரசு நிறுவ றொபேட் முஹாபே எதிர்ப்பு

(ஹராரே)

தனது பதவிக்காலம் முடிவடை வதற்கு முன்னரே இடைக்கால அரசாங்கமொன்றை நிறுவ வேண்டு மென எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை சிம்பாப்வே ஜனாதி பதி றொபேட் முஹாபே நிராகரித் துள்ளார்.

அத்துடன் தற்போது தான் பதவி விலக வேண்டிய் சூழ்நிலை ஏற்படவில்லை எனவும் அவர் மேலும உறுதிபடக் கூறியுள்ளார்.

சிம்பாப்வேயில், தற்போதுள்ள ஜனாதிபதி றொபேட் முஹாபேயின் பதவியில் இடைக்கால ஜனாதிபதி ஒருவரை எவ்வாறு அமர்த்தலா மென்ற புதிய திட்டமொன்றை சிம் பாப்வே, பிரிட்டன் மற்றும் தென் னாபிரிக்க அதிகாரிகள் வகுத்துள்ள தாக முன்னர் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இதனையடுத்தே றொபேட முஹாபே தனது நிராகரிப்புக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை சிம்பாப்வேயில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டித் தொடர்களில் விளையாடுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த இங்கிலாந்து தற்போது சம்மதம் தெரிவித்து ள்ளது. இதன் மூலம் சிம்பாப்வே யின் எதிர்க்கட்சியினருக்கும் உலக நாடுகளுக்கும் நல்ல பாடம் புகட் டப்பட்டுள்ளதாக முஹாபே கூறி யுள்ளார். (பி-2)

சமாதான மாநாட்டில்

## ஒலிப்பதிவு கருவி மூலம் கலந்து கொண்ட பலஸ்தீனர்

(டெல்அவிவ்)

இஸ்ரேல் பகுதிகளில் மேற் கொள்ளப்படுகின்ற தற்கொலைத் தாக்குதல்களை பலஸ்தீன அரச தரப்புப் பிரதிநிதிகள் கண்டித்துள்ள னர்.

ஒலிப்பதிவு கருவியூடாக லண் டனில் இடம் பெற்ற சமாதான மாநாட்டில் கலந்துகொள்ளும் போதே இக் கண்டனத்தை அவர்கள் வெளி யிட்டனர். அத்துடன் பலஸ்தீனத் தில் பல சீர்திருத்தங்களை மேற் கொள்ளுவதற்கும் இணங்கியுள் ளனர்.

இதேவேளை இஸ்ரேல் - பலஸ்தீன வன்முறைகளை முடிவுக்குக் கொண் டுவரும் வகையில் லண்டனில் இடம் பெற்ற சமாதான மாநாட்டில் பலஸ்தீனர் கலந்து கொள்ள இஸ்ரேல் தடைவிதித் திருந்தது.

இதனையடுத்தே பலஸ்தீனப் பிரதிநிதிகள் ஒலிப்பதிவுக் கருவியூடாக இம்மாநாட்டில் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (பி-2)

# கருவறை தோறும் திருமுறை முழங்க வேண்டும் சிவ பூசையிற் குறைவு நேரின் நாட்டுக்கே கேடு

மாந்தர் புரியும் கருமங்கள் யாவிலும் மகத்தானது சிவ பூசையே. உலகநலனுக்காகவும் ஆத்ம சுகத்துக்காகவும் உலக முதல்வனாயும் ஆத்மநாதனாயும் உள்ள சிவபெருமானது அருள் வேண்டிப் புரியும் கைங்கரியம் ஆதலால் சிவபூசை மகத்துவமானதேயாம். சிவபூசையில் குறைவு நேரின் உலக நலத்திலும், ஆத்ம நலத்திலும் குறைவு நேரிடும்.

மகத்துவமான கைங்கரியம் ஆதலாலே சிவபூசையை மாட்சிமைப்பட்டதாகச் செய்தல் வேண்டும். பூசை கொள்ளும் பெருமான் சௌபாக்கியம் உடைய தற்பரவஸ்துவாதலாலே 'பூசை கௌரவத்துடன் செய்யப்படுதலே முறை. வேத சிவாகமங்களையும் [illegible] ரின் பிழிவான சைவத்திருமுறை, சைவசித்தாந்தங்களையும் நன்கு கற்று கற்றாங்கு ஒழுகும் திருவுடையந்தணர்களே கௌரவத்துடன் சிவபூசையாற்றும் தகைமைப்பாடுடையவராவர். இத்தகவு காரணமாகவே திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் வாழ்க அந்தணர் என அவர்களை முதற்கண் வாழ்த்தினார்.

### சிவபூசைக்குரியோர்

சிவப்பிராமணர்களையே சிவபூசை ஆற்றுவதற்குரிய அதிகாரிகளாகச் சிவாகமங்கள் கூறுகின்றன. வேதத்தில் அக்கினி காரியமே பேசப்படுகிறது. சிவபூசை நுட்பமாகவே கூறப்பெற்றிருக்கிறது. வேதத்தில் நுண்பொருளாகச் சொல்லப்பட்ட சிவபூசையை ஆகமங்கள நன்கு விளக்கியுரைத்திருக்கின்றன. சிவபெருமானின் பல்வேறு மூர்த்தங்கள் இம்மூர்த்தங்களைப் பிரதிட்டை செய்து வழிபடுதற்கேற்ற கோயிலமைப்பு, இக்கோயில்களில் செய்யும் நித்திய, நைமித்தியக்கிரியைகள் ஆகியன பற்றி விரிவான விதிமுறைகளை அவை வகுத்திருக்கின்றன.

இவ்விதிமுறைகளை எல்லாம் இவற்றை ஓதுவதற்கு அதிகாரிகளான சிவப்பிராமணர்களே அறிவர். நால் வேதங்களை மாத்திரம் கற்றோர் ஆகம விதிமுறைகளை அறியார். ஆதலால் இவற்றை அறியாத வேதப்பிராமணர் சிவ பூசை செய்வதற்கு அருகரல்லர் என ஆகமங்கள் விதித்துள்ளன. அன்றியும் பிழைப்பினை முன்னிட்டுச சிவபூசை செய்ய முற்படும் ஸ்மார்த்தப்பிராமணர்களால் நாட்டுக்குக் கேடுவிளையும் எனவும் எச்சரித்துள்ளன.

வேதம் நான்கினும் உள்ள மெய்ப்பொருளைச் சிவாகமங்கள் விரித்துரைத்த வண்ணம் அனுபூதியாய் உணர்ந்த அருளாளர்கள் பாடிவைத்த பண்சுமந்த பாடல்களே சைவத்திருமுறை. அவை ஆராயும் வேதங்கள் அறியாத சிவனைப் பெம்மான் சிவனென்றே எனக் கண்ணுக்குக் கண்ணாகக் காட்டுகின்றன. சிவபெருமானது குறிகளையும் அடையாளங்களையும் நால்வேத அளவினதாக அன்றி ஆயிரம் ஆரணங்கள் என்று கூறுமாறு மிகப்பரக்கப்படுகின்றன. அருளாளர்கள் கோயில் தோறும் செல்லும் இடத்தும் பெருமான் கோயிலை வலம் வருமிடத்தும் சந்நிதியில் நின்றும் மனதுருகிப் பாடிய பாடல்களே அவை. அவை அர்ச்சனையாகவே அருளப்பட்டன. அவ்வருச்சனைகளை இறைவனும் மிக உகந்தனன். சுந்தரர் செந்தமிழில் இறைவன் நனிவிரும்பினன் என்ற செய்தியைச் சிவப்பிரகாச சுவாமிகள் தெரிவித்திருக்கிறார். கச்சி மேற்றளியில் விட்டுணுவானவர் சம்பந்தப் பிள்ளையாவது பதிக இசைக்குருகி ஓத உருகீசராக வீற்றிருக்கின்றார். ஆதலினாலே பெருமானுக்கு உகப்பான இப்பண்ணார்ந்த பாடல்களை இசைத்தே முன்னோர் பூசனை புரிந்தனர். ஆவாகனம் ஆதிய பூசனை அங்கங்களுக்கு உயிர்ப்பூட்ட வல்ல இனிய வாசகங்கள் தமிழ்வேதத்தில் நிறைந்து கிடக்கின்றன.

### ஓதுவதற்குரிய அருட்பாக்கள்

''எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைத்தால் அங்கே வந் தென்னோடும் உடனாக நின்றருளி'' என்னும் சுந்தரர் செந்தமிழ் ஓதுமிடத்து நாம் பூசிக்கும் மூர்த்தத்தில் பெருமான் எழுந்தருளும் வண்ணத்தை உணரலாமல்லவா? தூபத்தின் பொருள் சிவ நினைவே.

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்.... போன்ற வாசகங்களை நினைந்து தூபமிட்டால் அது பொருள் பற்றிச் செய்கின்ற பூசனையாகுமல்லவா!
'ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் போற்றி
சோதியே சுடரே சூழொளி விளக்கே ஆதிய வாசகங்களை ஓதித் தீபமேந்தினால் சோதியுட் சோதியான பெருமானே விளங்கித் தோன்றுவாரன்றோ! இவ்வாறு பூசைக் கிரியைகள் ஒவ்வொன்றின் போதும் ஓதுவதற்குரிய அருட்பாக்களை அச்சுவேலி சிவஸ்ரீ குமார சுவாமிக் குருக்கள், அருணை வடிவேல் முதலியார் ஆகியோர் குறிப்பிட்டிருக்கின்றனர். நாவலரவர்கள் குறித்து வைத்திருந்த ஏட்டிலுள்ளபடி அமைந்த சிவபூசைத்திரட்டு என்ற நூலிலும் போதுமளவு தமிழ்வேத மந்திரங்கள் உள்ளன. பூசனையின் போது பாராயணப் பகுதியில்போற்றி செய்வதற்கென எத்தனையோ பாராயணப் பனுவல்கள் திருமுறையிலுள்ளன. ஸ்ரீருத்திரமந்திரத்தின் திருப்பதிக வடிவ்வாகப் பக்திச்சுவை நனி சொட்டப் பாடி நின்ற திருத்தாண்டகம் அவற்றுள் ஒன்று. திருமுறை அடங்கலும் ஆயிரத்தெட்டுப் போற்றிகள் உள்ளன. இவற்றுள் நூற்றெட்டுப் போற்றிகளைக் கொண்ட அப்பர் சுவாமிகளின் போற்றித் திருத்தாண்டகம் ஆதிசைவர்களால் பூசிக்கப்பெறும் திருவாரூர் தியாகேசப் பெருமான் சந்நிதியில் பூசை வேளையில் ஓதப்படுவதாகும். இப்பெருமான் சந்நிதிக்கு ஸ்மார்த்தப் பிராமணராகிய ஸ்ரீ சங்கராச்சாரியாரால் கூட பூசிக்க முடியாத சைவாசாரம் பேணப்படுவது போற்றற்குரியது. போற்றி என்பது ஏழு கோடி மந்திரங்களில் 'நம' என்பதற்குத் தமிழ்ப்பதமாகும். இப்போற்றி என்பதை ஈறாகக் கொண்டு தீர்ந்த அன்பாளரான மணிவாசகர் குழைத்த சொன்மாலைகள் பல திருமுறையில் உள்ளன. இவற்றை

## வெள்ளி நற்சிந்தனை

ஓதிக் 'கொண்டருள் போற்றி' என வேண்டினால் பெருமான் அவற்றை உகந்த அருச்சனையாகக் கொள்வரன்றோ, இனிச்சிவாகமத்தின் திரண்ட பொருள் பூசனையாதல் போல திருமுறைப் பொருளும் பூசனையேயாம். அவை பூசனையாக அருளப்பட்டன. ஆதலால் தேவார திருவாசகங்கள் யாவும் பூசித்தற்குரியனவேயாம். எனவே பூசனை தொடங்கியது முதல் முடியும் வரை திருமுறை ஒலிக்கும் வண்ணமாகப் பூசனை நிகழ்த்தலாம். தஞ்சைப் பெரிய கோயிலிலிருந்த நாற்பத்தெட்டு ஓதுவார்களும் இன்றுள்ளது போல் திராவிட வேத பாராயணத்தின் போது பாடும் சில பாடல்களை மாத்திரம் ஓதுவதற்கென நியமனம் செய்யப்பட்டிருந்தனரெனக் கருத இடமில்லை. அவர்கள் பூசனை வேளை முழுவதும் தக்கதக்க பண்களை பாடி மகிழ்ந்தனர் என்றே கூறத் தோன்றுகிறது. அன்றியும் அன்புப்பிழம்பாயும் அறிவுருவாயும் பரிணமித்ததற்கு அனுசரணையாயமைவதே பூசைக்கிரியை. இஃது பொருள் பற்றிச் செய்யும் பூசனையாற்றிய கண்ணப்பரின் திறம் வியந்து, பெருமானருளிய வாக்கால் நன்கு தெளியப்படும். (அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு, அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவு) இத்தகைய பொருள் பற்றிச் செய்யும் பூசனைக்கு பொருள் புரியாத சுலோகங்கள் எவ்வாறு உதவும்.

### இன்றைய பூசகர்களின் நிலைமை

இனிநமது கோவில்களில் பூசகர்களின் நிலையை நோக்குவோம். கோயில் கட்டிய ஒரு செட்டியார் குறித்து கிளை வாழகிட்டங்கி அமைத்தவர் என ஒரு பெரியார் கூறினார், அக்கிடங்கிகளில் தம் மனை வாழத் தொழில் செய்வோரே நம் அந்தணர். பிழைப்பிற்காகப் பூசனை புரியும் வேதப் பிராமணர்களால் நாட்டிற்குக் கேடு விளையும் என்ற ஆகம விதியை மீண்டும் மீண்டும் உரைத்தற்கேற்ற வகையிலே நமது பூசகர்கள் உள் ளனர். இவர்கள் வேத மந்திரங்கள் சிலவற்றையே தெரிந்துள்ளனர். அவற்றின் பொருள் அறிந்தவர்களெனக் கூறுதற்கு [illegible] பாகத மொழியிற் பலபல கூறும் அமணர்கள் குறித்து ஞமண.... என நகையாடிய வாசகத்தையே சற்று அச்சத்துடன் நமது வேதமந்திரம் கூறும் அருச்சகர்கள் குறித்தும்கூற வேண்டி யுள்ளது. இத்தகைய குறைபாடுகள் குறித்து விவரித்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. இக் குறைபாடுகள் நன்கு உணரப்பட்டவையாகும். இவற்றைச் சீர்திருத்துவதற்கான ஆலோசனைகளும் திட்டங்களும் கூறப்பட்டு வருவதும் பலரும் அறிந்ததே. இத்திட்டங்களெல்லாம் அர்ச்சகர்கள் சிவாகம விதிமுறைகளை நன்கு பயின்று திருமுறை ஓதிப் பூசனை யாற்ற வல்லவராதல் வேண்டும் என்பதை உடன்படுகின்றன. பழத்தின் இன்சுவைபோன்ற திருமுறைச் சுவை பல நாள் பழக்கத்தின் பின்னே வாய்ப்பதாகும் பல நாள் பயின்று திருமுறைச் சுவையுணர்ந்து அர்ச்சகர்கள் ஓதுதல் வேண்டும். ஆதிசைவர்கள் சிலர் அதிகா லைப்பொழுதில் எழுந்து அனுட்டானங்களை முடித்து தணிந்த மனத்தினராய் தம் உள்ளத்தினின்று எழும் பண்ணிசையைப் பாடிய வண்ணமே பூசைக்கான ஆயத்தங் களைச் செய்து திரிதல் மங்களகரமாக இருக்கும். இத்தகைய மங்களமே கோவிலின் சோதியைப் பெருக்குவது. இத்தகைய ஆசாரியர்களால் கோயில் கருவறையினின்றும் திருமுறைப் பாக்களை உளமுருகிப்பாடுதல் இயலும். அவ்வாறு பாடவல்லவரே கோயில்களில் பூசகராக இருத்தல் முறைமை. அதற்கு இயலாதவர் தாமாக வெளியேறுவதே முறைமை இல்லையேல் அவர்களை வெளியேற்றுவதும் முறைமையானதே.

நன்றி

*சிவத்தொண்டன்.*

## மினிபஸ் சேவை நடத்தக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயம் வரை மினிபஸ் சேவையினை நடத்துமாறு ஊர்காவற்றுறை மினிபஸ் உரிமையாளர் சங்கத்திடம் மேற்படி பாடசாலைச் சமூகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்களாவடிச் சந்தியில் இருந்து வேலணை-புளியங்கூடல் சந்தி செல்லும் பிரதான வீதியின் ஒரு பகுதி மூடப்பட்டிருப்பதால் மேற்படி பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் வங்களாவடிச் சந்தியில் இருந்து நடந்தே செல்ல வேண்டி இருப்பதால் இதனை நிவிர்த்தி செய்யும் வகையில் புளியங்கூடல் சந்தி ஊடாகச் சென்று வரக் கூடியதாக மினிபஸ் சேவையினை நடத்துமாறும் கோரப்பட்டுள்ளது. (உ-75)

## மாதகல் பகுதி மயானம் செல்வதில் சிரமம்.

(கோப்பாய்)

மாதகல் பகுதி மக்கள் இறந்தவர்களின் தகனக்கிரியைகளைச் செய்வதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிக்கான மய்யானம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கின்ற காரணத்தினால் படையினரின் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே இப்பகுதி மக்கள் தகனக் கிரியைகளைச் செய்து வருகின்றனர். (உ-79)

## மீள ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மேற்கு பெரிய புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் முடிப்பிள்ளையார் முன்பள்ளியின் மீள் ஆரம்ப வைபவம் அண்மையில் வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்றது. (உ-75)

## பொதியைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

முகமாலை படையினர் சோதனைச் சாவடிக்கு அருகில் கடந்த மாதம் பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்,

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கல்வி வளர்ச்சிக் கழகம்

(ஊர்காவற்றுறை)

வேலணை மாணவர்களின கல்வி வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு கல்வி வளர்ச்சிக்கழகம் ஒன்று விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளது. (உ-75)





யா. உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையின், தரம் I மாணவர்களின் கால்கோள் விழா நிகழ்வில் அதிபர் மு. விக்னேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், பங்குத்தந்தை கே. அன்ரனிபாலா ஆகியோருடன் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை முதலாவது படத்திலும், இப் பாடசாலையின் முன்னாள் அதிபரும், ஊரெழு கணேச வித்தியாலய அதிபருமான இ.குலசிங்கம் மாணவர் ஒருவருக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணப் பொதி யொன்றை வழங்குவதனை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## வடக்கு - கிழக்குப் பகுதிக்கு உலக வங்கி கூடுதல் உதவிகளை வழங்கும்

### தெற்காசியப்பிராந்தியத் துணைத் தலைவர்

(கொழும்பு)

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு -கிழக்கு மாகாணத்திற்கு உலக வங்கியினால் கூடுதல் உதவிகள் வழங்கப் படவுள்ளதாக இலங்கை வந்துள்ள உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான துணைத் தலைவர் மீக்கோ நிஷிமிசு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு கொழும்பில் வைத்து வழங்கிய பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்ட மீக்கோ நிஷிமிசு மேலும் கூறுகையில்,

தற்போது இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் நம்பிக்கை தரக்கூடியனவாக உள்ளன.

இதன் காரணமாகவே இலங்கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்க உலக வங்கி முன்வந்தது.

பேச்சு வார்த்தையின் முன்னேற்றங்களை உலக வங்கி உன்னிப்பாக அவதானிப்பதுடன் நிரந்தர சமாதானம் ஏற்படுத்த வேண்டிய தன் அவசியத்தையும் இலங்கை அரசுக்கு வலியுறுத்தி வருகின்றது.

கடந்த காலங்களில் அபிவிருத்திக்கு வழங்கப்பட்டநிதி உதவிகள் யுத்தத்திற்கு அதாவது அழிவுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளதால் இம்முறை நிதி வழங்கும் விடயத்தில் உலக வங்கி அவதானமாகவே இருக்கும் என்றார். (உ)

## வெற்றுக் காணிகளை சீரமைக்கும் படையினர்

(தென்மராட்சி)

கைதடி நுணாவில் வைரவர் கோவிலடிச்சந்திக்கு முன்பாகவுள்ள வெற்றுக் காணிகளைப் படையினர் துப்புரவு செய்து வருகின்றனர். முகாம் அமைக்கும் வகையிலேயே இவ்விதம் படையினர் துப்புரவுப் பணியில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

குறித்த காணிகள் ஏ-9 பிரதான பாதையில் வயற்கரையோரம் அமைந்துள்ளதும் இப்பகுதியில் குடிமனைகள் எதுவும் தற்போது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

இதேசமயம் நுணாவில் சந்திக்கருகில் பொது மக்களின் வீடுகளில் நிலைகொண்டிருந்த படையினரில் கணிசமானோர் தற்போது நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலுக்கு முன்பாகவுள்ள வெற்றுக்காணிகளில் முகாமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மீன் விலைகுறைப்பு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அனலைதீவில் வைத்து விற்பனை செய்யப்படும் மீன்வகைகளின் விலையை கிலோவுக்கு 10ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-75)

## பதவிக்காலம் முடிந்த பின்னர்
# நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேக்
# ஒருகணமேனும் இங்கு தரிக்கக் கூடாது
## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் அச்சுறுத்தல்

(கொழும்பு)

நோர்வேத்தூதுவர்ஜோன் வெஸ்பேக் தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் ஒருகணமேனும் இலங்கையில் தரித்திருக்கக் கூடாது.

பதவிக்காலத்தை நீடித்து தொடர்ந்தும் இவரை இலங்கையில் வைத்திருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அரசாங்கம் பெரும் பின்விளைவுகளைச்சந்திக்க நேரிடும்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்திருக்கிறார் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா.

இது தொடர்பில் மேலும் டில்வின் சில்வா கூறியிருப்பதாவது.

வெஸ்பேக்கின் பதவிக்காலம் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப் பட்டுள்ளதாக இது வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

தவிரவும், ஜனாதிபதி சந்திரிகா இதற்கு அனுமதிக்காத்துடன், அதி சக்திவாய்ந்த வானொலி உபகரணங்களை அவர்விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக் கொடுத்திருப்பதை வன்மையாக கண்டித்துள்ளார்.

எமது நாட்டுக்கே துரோகமிழைத்து வரும் நோர்வே தூதுவரை உடனடியாகவே நாட்டை விட்டுத் துரத்த வேண்டும்

இதை விடுத்து அவரது பதவிக் காலத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசு நீடிக்க முயல்வது கண்டிக்கத்தக்கது.

தாயகத்தின் கௌரவத்திற்கும், தேசியப் பாதுகாப்பிற்கும் எதிராகச்செயற்படும் இவரது துரோகத்தனத்தைதேசப் பற்று மிக்க எந்தவொரு பிரஜையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

இவரை நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில்எந்தவிதமாற்றத்திற்கும் இடமில்லை என்று தெரிவித்துள்ளார்.

(உ)

# ஒன்றரை இலட்சம் பேரின் இல்லிடங்களை
# ஆக்கிரமித்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள14 அதியுயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 69 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் 26 ஆயிரத்து 378 குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் இன்னமும் மீளக் குடியமர முடியாத பரிதாப நிலையில் கடந்த பலவருடங்களாக இருந்துவருகின்றனர்.

இவ் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரைநகர், ஊறணி, வேலணை, மண்டைதீவு, யாழ் நகரம்அரியாலைகிழக்கு தனங்கிளப்பு, எழுதுமட்டுவாள், வடமராட்சி கிழக்கு, பலப்பை-பருத்தித்துறை பருத்தித்துறைவல்வெட்டித்துறை, வலிகாமம் வடக்கு கொழும்புத்துறை குருநகர் ஆகிய இடங்களில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன

இவற்றில் காரைநகரில் மூன்று கிராமசேவகர்கள் பிரிவைச் சேர்ந்த 200 குடும்பங்களும் ஊறணியில் ஒரு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 98 குடும்பங்களும் வேலணையில் இரு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 61 குடும்பங்களும் மண்டைதீவில் இரு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 553 குடும்பங்களும் யாழ் நகரில் ஒரு கிராம சேவகர்பிரிவைச்சேர்ந்த 125 குடும்பங்களும் அரியாலை கிழக்கில் ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 296 குடும்பங்களும். தனங்கிளப்பில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 624 குடும்பங்களும்,

எழுதுமட்டுவாளில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 651 குடும்பங்களும். வடமராட்சி கிழக்கில் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 551 குடும்பங்களும் பலப்பை பருத்தித்துறையில் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 10 குடும்பங்களும். பருத்தித்துறையில் ஒரு கிராமசேவையாளர்பிரிவைச் சேர்ந்த 50 குடும்பங்களும், வல்வெட்டித்துறையில் ஒரு கிராம சேவையாளர்பிரிவைச் சேர்ந்த 20 குடும்பங்களும். வலிகாமம் வடக்கில் இருபத்தெட்டு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 18ஆயிரத்து 939 குடும்பங்களும் கொழும்புத்துறை குருநகர் பகுதிகளைச் சேர்ந்த ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 200 குடும்பங்களுமாக மொத்தம் 26 ஆயிரத்து 378 குடும்பங்கள் இன்னமும் அவற்றின் பாரம்பரிய சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுக்கப் பட்டநிலையில் இருக்கின்றன.

இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பல்வேறு விதமான சிரமங்களுக்கும் மத்தியில் இடம் பெயர்ந்தோர்நலன் புரி நிலையங்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் எனசெறிந்து வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## ஆனந்தன் வைரவர் ஆலய பிள்ளையார் சிலை திருட்டு

(சண்டிலிப்பாய்)

பட்டப் பகலில் பிள்ளையார் சிலை திருட்டுப்போன சம்பவம் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று மானிப்பாயில் இடம்பெற்றுள்ளது

மானிப்பாய் ஆனந்தன் வைரவர் ஆலயத்தில் இடம் பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

மேற்படி ஆலயத்தில் காலைப்பூசை முடித்து விட்டுச் சென்ற பூசகர் மதியப் பூசைக்காகச் சென்ற சமயம் அங்கு இருந்த பிள்ளையார் சிலை திருட்டுப் போயிருந்தது.

இத் திருட்டுத் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-258)

## வடக்கு-கிழக்கில் கஷ்டப் பிரதேசத்தில் 915 பாடசாலைகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 915 பாடசாலைகள் கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் இஸதீன் தெரிவித்துள்ளார்.

தேசிய இடமாற்றக் கொள்கை நியமனங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் இது தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் ஆயிரத்து 834 பாடசாலைகளில 707 பாடசாலைகள் அதி கஷ்டப் பிரதேசத்திலும் 268 பாடசாலைகள் கஷ்டப்பிரதேசத்திலும் 248 பாடசாலைகள் ஓரளவு வசதியுடைய பிரதேசத்திலும் 363 பாடசாலைகள் வசதியுடைய பிரதேசத்திலும் 248 பாடசாலைகள் மிகுந்தவசதியுடையபிரதேசத்திலும் அமைந்துள்ளதாக இஸதீன் மேலும் தெரிவித்தார்.

(உ-10)

## சமாதான மதிப்பீட்டு அறிமுக ஆய்வுப் பட்டறை

(தென்மராட்சி)

கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புகளின்ஒன்றியம் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் வஸ்தியன்ஹோட்டலில் சமாதானம் மற்றும் முரண்பாடுகளின் தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிமுக ஆய்வுப்பட்டறை ஒன்றினை நடத்தவுள்ளது

இவ் ஆய்வுப் பட்டறையில் அரசசார்பற்றநிறுவனங்களின் பிரதிநிதிகள் சமூக சேவையாளர்கள் மற்றும் கல்விமான்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.

(உ-77)

## பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் பொங்கல் விழா

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் பொங்கல் விழா நேற்று முன்தினம் அலரி மாளிகையில கொண்டாடப் பட்டது.

இவ் வைபவத்தில் இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் தமிழ் எம். பிக்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜாவினால் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலில் பொங்கல் விழா நடத்தப்பட்டது.

இதில்அமைச்சர் தி மகேஸ்வரன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, கூட்டமைப்பு எம் பி.ந. ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளைநாளைஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காஜனாதிபதி மாளிகையில் பொங்கல் விழாவைக் கொண்டாடவுள்ளார் இதில் கலந்து கொள்ளுமாறு தமிழ் எம். பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(உ-10)

2 வருடங்கள் கொழுந்துவிட்டெரிந்த

## போர்த்தீயை 1 வருடத்தில் அணைத்தவர் பிரதமர்

(கொழும்பு)

20 வருடங்களிற்கு மேலாக நாட்டில் கொழுந்து விட்டெரிந்த யுத்தத்தீயை 12 மாதங்களிற்குள் அணைக்க பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினால் மட்டும்தான்முடிந்திருக்கிறது

அவிசாவளை மேஜர் ஏ. கே. அரசகுலரட்ண பலப்பிட்டியாவில்உள்ள முத்துமாரி அம்மன்ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொங்கல்விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அமைதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் முயற்சிகளை சில தீய சக்திகள் சீர்குலைக்க முனைந்துவருகின்றன.

இத்தீய சக்திகளின் இந்நடவடிக்கைக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாதுஎன்றார்.

(உ-10)

## திறப்பு விழா

(சண்டிலிப்பாய்)

மாதகல் புனித தோமையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை மு ப.10.00மணிக்கு இடம் பெறவுள்ளது.

(உ-258)

## தேசிய பூங்காவில் கஞ்சா

(புத்தளம்)

புத்தளத்தில் உள்ள தேசிய பூங்காவில் சுமார் ஒரு ஏக்கர் பிரதேசத்தில் கஞ்சா பயிரிடப் பட்டுள்ளமையினை புத்தளப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் இரண்டு சந்தேகநபர்களை கைதுசெய்ததுடன் 24 ஆயிரம் கஞ்சாச் செடிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

(உ-10)

## பட்டயக் கணக்காளர் குழு யாழ்-வரும்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் உட்பட யாழ். குடாநாட்டு மாணவர்களுக்கு கணக்கியல்துறையில் தொழில் வழிகாட்டி அறிவூட்டல்போதனைகளை நடத்த இலங்கை பட்டயக் கணக்காளர் நிலையத்தைச் சேர்ந்த கணக்காளர் குழு ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி யாழ் வரவுள்ளது.

இவர்கள் 3 தினங்கள் யாழில் தங்கியிருந்து வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

(உ-3)

## 7 அமைச்சர்கள் 23 ஆம் திகதி சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க சிபார்சு செய்த 7 அமைச்சர்களும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்

பிரதமர் சிபார்சு செய்த 7புதிய அமைச்சுப் பொறுப்புக்களில் ஒரு அமைச்சு தொடர்பாக மட்டுமே ஏற்பட்ட பிணக்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 7 அமைச்சர்களும் தமது பதவிகளை ஏற்கவுள்ளனர்.

(உ-3)

## கால் கோள் விழா

(தென்மராட்சி)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால் கோள்விழா கடந்த9 ஆம்திகதி அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவிற்கு இக்காலியில் இருந்து வருகை தந்திருந்த பழைய மாணவரான ச.பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் உசன் கந்தசாமி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. கேதீஸ்வரக்குருக்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இவ் வித்தியாலயத்தில் அன்று 34 மாணவர்கள்தரம்ஒன்றுக்கு அனுமதி பெற்றிருந்தகுடன் அனைவர்க்கும் யுனிசெவ் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன,

(உ-77)

எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவாம் என்பது இழுக்கு —குறள்—

# வலம்புரி

## தாளம் மாறும் கீதம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி வெளியிடும் செய்திகள் முன்னுக்குப்பின் முரண்பாடுடையதாகவுள்ளது.

சமாதானப் பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்கக்கூடாதெனக் ' கருத்துத் தெரிவித்தார்.பின்னர் சமாதானப் பேச்சுக்கள் நடை பெறும் போது அதில் ஜனாதிபதியின் பிரதிநிதியொருவரும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இவை ஒரு புறம்,மறுபுறத்தில் சமாதானப் பேச்சு வெற்றியளிக்க எனது ஆதரவை வழங்குவேன் எனக்கூறினார். இவ்வாறு கூறும் வழக்கம் ஒரு தடவை,இரு தடவையல்ல,வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தன்னைச் சந்திக்கும் போதெல்லாம் ஜனாதிபதி இதனையே கூறிவந்தார். சில வேளைகளில் அதனை ஜனாபதி மறந்தாலும்.அவரின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மறந்து விடுவதில்லை.அடிக்கடி பத்திரிகையாளர்களை அழைத்து சமாதான முயற்சிக்கு ஜனாதிபதி தொடர்ந்தும் தனது ஆதரவை வழங்கி வருகிறார் எனக் கூறிக்கொள்வார்.

இப்படியே தாளங்களை அடிக்கடி மாற்றிக் கீதம் இசைக்கும் ஜனாதிபதி சில வேளைகளில் திடீரென ஏதோ ஞாபகம் வந்தவர் போல் நான் முன்னெடுத்த சமாதான முயற்சிகளையே தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துச் செல்கின்றது. எனக் கூறுவார்.

நாட்டின் பொறுப்புள்ள தலைவா ஒருவர் அடிக்கடி தனது கருத்துக்களை மாற்றி மற்றிக் கூறுவது நாட்டின் இறைமைக்கே பங்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

சமாதான முயற்சியை சிங்கள மக்கள் முழு மனதோடு வரவேற்கிறார்கள். தமிழ் மக்களோடு ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் தென்னிலங்கை மக்கள் மிகவும் உறுதியோடு இருக்கிறார்கள்.இதனாலேயே கடந்த பொதுத் தேர்தலில் இனவாதிகளின் பிரச்சாரங்களையும் மீறி ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் தமது வாக்குகளை வழங்கி சமாதானத்திற்கு உரமிட்டனர்.

எனினும் சிங்கள மக்களின் மன நிலையை உணர்ந்து கொள்ளும் நிலைமை தென்னிலங்கை இனவாதிகளிடம் இல்லை.இதனாலேயே தற்போது அரசும்புலிகளும் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சியை அவர்கள கடுமையாக எதிர்க்கிறார்கள்.இதற்கு ஜனாதிபதி உடந்தையாக இருப்பது நாட்டிற்கு நல்லதல்ல.

விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் அரசு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கூறிய ஜனாதிபதிக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஓர் கனதியான பதிலை வழங்கியிருந்தார்.

இப் பதிலடியினால் அமைதியாக இருந்த ஜனாதிபதி இபபோது புதியதொருதாளத் தோடுகீதம இசைக்கின்றார்.

ஐ.தே.முன்னணி அரசினால் நாட்டிற்கு கேடு விளையுமாக இருந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைப் பதவி நீக்கம் செய்வேன்என்பதே ஜனாதிபதியின புதிய கீதம்.

பிரதமரைப் பதவி நீக்கம் செய்ப் போவதாக ஜனாதிபதி, எச்சரித்திருப்பது புதியதொரு சிக்கலை தோற்று விக்கும்.

## ஜெயா கொள்கலன்
# இறங்கு துறையை பயன்படுத்த மேக்சீலான் கம்பனிக்கு அனுமதி

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய கப்பல் கம்பனியான மேக்சீலான் கொழும்பு துறைமுகத்தில் உள்ள ஜெயா கொள்கலன் இறங்கு துறையைப் பயன்படுத்தவுள்ளது.

இக்கொள்கலன்களைப் பயன்படுத்துவது சம்ந்தமாக மேக்சீலான் கம்பனி துறைமுக அதிகார சபையுடன் நேற்று முன் தினம் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இக்கம்பனி 312 கப்பல்களை சொந்தமாகக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு வருடமும் பல இடங்களுக்கும் சுமார் 8 லட்சம் கொள்கலன்களை அனுப்பிவருகின்றது.

கைச்சாத்திட்டுள்ள இப்புதிய உடன்படிக்கையின் படி ஜெயா கொள்கலன் இறங்கு துறையில் சுமார் 1 லட்சத்து 65 கொள் கலன்கள்கையாளப்படும்.

மேக்சீலான் முகாமைத்துவப் பணிப்பாளர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், ஜெயா இறங்கு துறையின் செயற்திறன் கருதியே இதனை தெரிவு செய்ததாகக் கூறினார்.

அதேவேளை, இலங்கைத் துறைமுக அதிகார்சபை கடந்த இரண்டு மாதங்களில் பல சர்வதேச முன்னணி கப்பல்நிறுவனககளுடன இது போன்ற 4 உடன் படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தமிழ் மொழிப் பயிற்சி முடித்த பொலிஸ் குழு வடகிழக்கில் பணியாற்றும்

(கொழும்பு)

தமிழ் மொழியின் பயன்பாட்டினை அதிகரிக்கும் முயற்சிகளில் தேசிய நல்லிணக்கப்பிரிவு முன்னேற்றம் கண்டு வருகின்றது.

. தமிழ் மொழியில் பயிற்சி பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் வைபவம களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய நல்லிணக்கப்பிரிவுப் பணிப்பாளர் திருமதி திரிலோகசுந்தரி காரியவாசம் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், இந்த மொழியைப் பேசாதவர் மத்தியில் சிந்தனை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் மொழியைப் பேச வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் சிரேஷ்ட அத்தியட்சகர் ஆனந்த கெடடியாராச்சி கருத்துத் தெரிவிக்கையில்,

பொலிஸார் தமிழ்ச் சமூகத்துடன் சிறந்த உறவுகளைப் பேணுவதற்கு தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் மொழிப் பயிற்சியைத் தொடர்ந்த 196 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவினர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணியாற்ற உள்ளனர் என்றும் குறிப்பிட்டார். (உ-10)

# நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க அமைப்பு
## உருவாக்க வேண்டுகோள்

(கொழும்பு)

கல்வித்துறை நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கும் அமைப்பு ஒன்று விரைவில் உருவாக்கப்பட வேண்டும் என கல்வித்துறை நிர்வாக அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அசோக்க ஜயசிங்க கோரிகை விடுத்துள்ளார்.

அவர் இது பற்றி தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், இத்தகைய பயிற்சி நிலையத்தின் மூலமே கல்வித்துறை நிர்வாகத்தை செயல் திறன் மிக்கதாக மாற்ற முடியும்.

இதேவேளை, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை கல்வித்துறை நிர்வாகிகளாக நியமித்திருக்கின்றமை நியாயம் அற்றது. இதனாலேயே கல்வித்துறை நிர்வாகம் சீர் குலைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இவை தவிர சம்பள முரண்பாடுகள் எழுந்துள்ளமையையும் இவர் சுட்டிக்காட்டியதுடன், திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுல் செய்வதன் மூலம் இப்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம் என்றார். (உ-10)

## சுமார் 26 இலட்சம் தண்டப்பணமாக அறவீடு

(கொழும்பு)

மகியங்கனை நீதிமன்றத்தில் கடந்த வருடம் ஆயிரத்து 279 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதன் மூலம் 26 இலட்சத்து 26 ஆயிரத்து 850 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

மேலும் வாகனப் போக்குவரத்துச் சட்டங்களை மீறியமைக்காகத் தொடரப்பட்ட வழக்குகள் மூலம் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 350 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது. (உ-3)

## தெருவழி நாடகம்

(வவுனியா)

சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் வன்னி விடுதலை முரசு கலைஞர் குழு வவுனியாவில் தெருவழி நாடகங்களை ஆற்றுகை செய்து வருகின்றது.

சமகால நிலை தொடர்பில் வவுனியாவில் தெருவழி நாடகம் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். (உ)

## நன்நீர் மீன் பதப்படுத்தல் தொழிற்சாலை

(கொழும்பு)

நன்நீர் மீன்களைப் பதப்படுத்தல மற்றும் மீன்களை ரின்களில் அடைக்கும தொழிற்சாலைகளை அமைக்க கடல் தொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் தொழிற்சாலைகள் இரண்டும் இலங்கை மீன்பிடிக கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கவுள்ளது என்றும், இத்தகைய தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் 10 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும் என்றும் அமைச்சர் விஜயசேகர மேலும் தெரிவித்தார். (உ-10)

## நெல்லியடிச் சம்பவத்தில்
# காயமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க உத்தரவு

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நெல்லியடியில் இடம்பெற்ற மறியல் போராட்டத்தின் போது பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த சகலருக்கும் நட்டஈடு வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்துறை அமைச்சின் செயலாளர் எம்என்ஜுனைட்டுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த செவ்வாயன்று பிரதமர் ரணிலைச் சந்தித்தபோது இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவத்தில் 14 பொது மக்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி, திருகோணமலைப் பகுதிகளில் நடந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களில் பலியான மற்றும் காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடு வழங்குவது தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் பிரதமர் பணித்துள்ளார். (உ)

# கணனி அறிவை ஊட்ட உள்துறை
## அமைச்சு நடவடிக்கை

(சுதுமலை)

அரச திணைக்களங்களில் கடமை புரியும் அரச அலுவலர்களிடையே கணனி தொடர்பான அறிவை ஊட்ட பொது நிர்வாக உள் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்துறை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சகல அரசாங்க திணைக்களங்களிற்கும் சுற்றறிக்கை ஒன்றை கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளார்.

அரச ஊழியர்கள் தமது பாவிப்புக்குத் தேவையான கணனிகளை தெரிவு செய்து வாங்குவதற்கு தேவையான நிதி தமது திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இக்கடன்களுக்கு மிகக்குறைந்த வட்டி அறவிடப்படும் எனவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-252)

## முன்னேற்பாட்டு நடவடிக்கையாக
# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சளிப் பரிசோதனை

(சுதுமலை)

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் வைத்து யாழ்.மாவட்டத்தில் உள்ள எல்லா முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் சளிப்பரிசோதனை செய்யப்பட உள்ளது.

மார்பு நோய் சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.இந்திரராஜா சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் இது விடயத்தைக் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் 54 க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களிற்கு இப்பரிசோதனை மேற் கொள்ளப்பட்டதாகவும், அடுத்த வாரம் தொடக்கம் மிகுதி ஆசிரியர்களும் இப்பரிசோதனையில் இணைககப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுடன் பாலர் கல்வி ஆசிரியர்கள் மிகவும் நெருக்கமாகப் பழகுவதால் ஆசிரியர்களுக்கு மேற்படி நோய் இருந்தால் சிறுவர்களிற்கு இலகுவில் தொற்றக்கூடிய ஏது நிலை இருக்கும் என்பதால் இதனைத் தடுப்பதற்காகவே இப்பரிசோதனை இடம்பெறுகிறது. (உ-252)

## அமைச்சர்களுக்கு தடை

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் விளையாட்டு மன்றங்களில் அங்கம் வகிப்பதை தடை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டே விளையாட்டுச் சட்டத் திருத்தம் ஒன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டு வரவுள்ளார். (உ-3)


## யாழ்ப்பாண மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை
### பொதுக் கூட்ட அறிவித்தல்

**இடம்:** யாழ் வலயக் கல்விப் பணிமனை மகாநாட்டு மண்டபம்
**காலம்:** 18.01.2003 சனிக்கிழமை காலை 9.30 மணி
**தலைவர்:** பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்

**நிகழ்ச்சிகள்**

01. அகவணக்கம்
02. தலைவர் உரை
03. செயலாளர் அறிக்கை
04. அறிக்கையிலிருந்து எழுவன
05. உபகுழுக்களின் அறிக்கைகள் பரிசீலனையும, தீர்மானம் மேற் கொள்ளலும்.
   - ஆசிரிய வாண்மை விருத்திக்குழு
   - மாணவர் கல்வி மேம்பாட்டுக் குழு
   - தமிழ்மொழி கலைத்திறன் மேம்பாட்டுக் குழு

**மதிய போசன வேளை**

   - தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுக்குழு
   - விளையாட்டுத்துறை மேம்பாட்டுக் குழு

06. பேரவைக்கான நிதி தொடர்பான கலந்துரையாடல்
07. சிறப்புரை - தமிழீழக் கல்விக் கழகப் பிரதிநிதி
08. நன்றியுரை

★ பொதுச்சபை உறுப்பினர்களையும், உபகுழு உறுப்பினர் களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர்

பொ.கமலநாதன்.
செயலாளர்.


## தினசரி தியானம்
# உள்ளுணர்வு

உன் உள்ளுணர்வின் பெரும் பகுதி பாதி மறைந்து போனதும், நினைவிலிருந்து மறைந்துவிட்ட (ஆனால் மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவரக் கூடிய) நினைவுகளும் கொண்டது. உள்ளுணர் வெய்திய மனத்தில், பழைய வழக்கங்களையும், எண்ணங்களையும், ருசிகளையும், குணங்களையும் விட்டுவிட்டு புதியவற்றை அமைத்துக்கொள்ள உன்னால் முடியும். ஆழ்ந்த சிந்தனை செய். அடிக்கடி சத்சங்கம் செய். எவரையும் கேலி செய்யாதே. யாரிடமும் சீறி விழாதே.

சுவாமி சிவானந்தர்

### யாழ்...

மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்காத நிலையில், விண்ணப்பம் அனுப்பப்பட்டதற்கு ஆதாரமான பற்றுச்சீட்டின் பிரகாரம், விசேட ஏற்பாட்டின் கீழ் நேர்முகப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அவ்வாறு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் உயர் புள்ளிகளை உடையவர்கள்,தங்களுடைய விண்ணப்பம் அனுப்பப்பட்டமையை பரீட்சைத் திணைக்களத்தில் உறுதி செய்து, பிரதம ஆணையாளரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த)

### அரசகுழு...

உறுப்பினர்கள் தமது பெல்ஜியவிஜயத்தை முடித்துக் கொண்டு நாளை இத்தாலிக்கும் பின்னர் அஸ்திரியா, ஜேர்மனிக்கும், விஜயம் செய்வதுடன் அங்குள்ள

### கேணல்...

கூட்டமும் இடம் பெற்றது.

தீருவில் கிட்டு நினைவாலயத்தில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா பொது ஈகச் சுடரை ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை அரசியல் பிரிவு பிரமுகர் வதனி ஏற்றி வைத்தார்.

அஞ்சலி நிகழ்வுகள் வல்வெட்டித்துறை கிராம அலுவலர் எஸ்.சிவபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

நல்லூரில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் விசேட பந்தலில் வைக்கப்பட்டிருந்த பத்துப் போராளிகளின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையாற்றினார். (இ-52)

சமஸ்டி அரசமைப்புத் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார் (வ)

### இரு நாள்...

திட்டம் ஒன்று தீட்டி அதனை அடுத்த உபகுழுக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இவ் உப குழுக் கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டுள்ள பதினொரு தீர்மானங்களும் வருமாறு.

* முல்லைத்தீவு,மாங்குளம், வெள்ளாங்குளம் வீதிகளைப் புனரமைத்தல்

* அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை,திருக்கோவில், யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பனிக் கட்டித் தொழிற் சாலைகளை அமைத்தல்

* மன்னார் மாவட்டத்தில் நெற்களஞ்சிய சாலைகளைப் புனரமைத்தல்

* கிளிநொச்சி மாவட்டத்தில் பால் பதனிடும் நிலையங்களை ஏற்படுத்தல்.

* முல்லைத்தீவு,மன்னார், அம்பாறை மாவட்டங்களில் மனித வள அபிவிருத்திகளை ஏற்படுத்தல்.

* கிளிநொச்சியில் பெண்களுக்கான சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்தல்.

* மாவட்டம் தோறும் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல்

* கிளிநொச்சியில் அதிதீவிர கண்காணிப்பு நிலையம் அமைத்தல்

*பொத்துவில் மருத்துவமனையைப் புனர்அமைத்தல்

*திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி,வவுனியா மாவட்டத்தில் மடு, செட்டிக்குளம், மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் ஆகிய பகுதிகளில் நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தல் ஆகிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுளளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுகளுக்கான உபகுழுக்கூட்டம் அடுத்த மாதம் 13ம், 14ம் திகதிகளிலும் மார்ச் மாதம் 6ம், ஏழாம் திகதிகளிலும் சிரான் அலுவலகத்தில் மீண்டும் நடைபெறவுள்ளது.(ம)

### துறைமுகப் பணியாளர் வேலை நிறுத்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இறங்கு துறைமுகப் பணியாளர்கள் நேற்று முழுநாளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் துறைமுகப்பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன.

துறைமுகப் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே வேலை நிறுத்தப் போராட்டம் இடம் பெற்றது.

நண்பகலுக்குப் பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் வழங்கிய உறுதி மொழியின் அடிப்படையில் போராட்டம் கைவிடப்பட்டதும் இன்று வழமை போன்று துறைமுகப் பணிகள் இடம்பெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நிவாரணப் பொருட்களுடன் சயிந்த என்ற கப்பலும், சீமெந்துடன் லிவபூல் என்ற கப்பலும் துறைமுகத்தில் தரித்து நிற்பது குறிப்பிடத் தக்கது. (த-52)

### உலக வங்கி....

மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புனரமைப்பு உப குழுவுக்கு வழங்கப்படும் நிதியை உலக வங்கி கையாள்வது தொடர்பாகவும்,நிதிக்காப்பாளராக செயற்படுவது குறித்தும் விரிவாக இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

அத்துடன் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் புனரமைப்புக்கு நிதிவழங்குவதென்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் உறுதியளித்துள்ளனர். (இ)

### உள்ளக....

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் இருந்து எந்த விதமான பிரதிபலிப்பும் கிட்டவில்லை.

1997ம் ஆண்டிலும்,2000ம் ஆணடிலும்,பொது ஜன ஐக்கிய முன்னணியினால் முன்வைக் கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தில் சமஷ்டி அரசியல் அமைப்புக்குச் சமமான ஒரு திட்டமே இடம் பெற்றிருந்தது.

சமஷ்டிக் குடியரசு அரசமைப்புத் திட்டத்தில் எவ்வாறான அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பதென்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.எனினும் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து 14 மாதங்கள கடந்த போதும், எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கவில்லை என்றும்ஜனாதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன்,உள்ளக சுயநிர்ணய உரிமைக கொள்கையானது, நாடுகளைப் பிரிப் பதற்கு மட்டுமே பயன்படுததப்பட்டுள்ளது (ம)

### தளபதிகளுடன் பிரதமர் ஆலோசனை

முப்படைகளையும் மறுசீரமைபபது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இராணுவ உளவுப் பிரிவு பொலிஸ உளவுப் பிரிவு ஆகியவற்றில் மாற றங்களைக் கொண்டு வருவது தொடர்பாகவே பிரதமர் ஆலோசனை நடத்தியுள்ளார். (ம)


## அறிவித்தல்

திட்டமிடப்பட்ட 17.01.2003, 18.01.2003 திகதியில் நடைபெறவிருந்த சிறுவர்களுக்கான, திறன் விருத்திப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் கீழ்க் குறிப்பிட்ட திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

24.01.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யா/மருதங்கேணி இந்து தமிழ் கலவன பாடசாலையிலும் 25.01.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறையிலும் நடைபெறும்.

திட்ட இணைப்பாளர்,
சிறுவர் பாதுகாப்பு நிதியம்,
யாழ்ப்பாணம்.

c5634



## பொதுக்கூட்டம்

வடமராட்சி முச்சக்கர மோட்டார் ஊர்திகள் சேவை சங்கத் (ஓட்டோ)தினால் 17. 01. 2003 இன்று மாலை 3. 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் நடாத்தப்பட இருப்பதால் அனைத்து முச்சக்கர வண்டி (ஓட்டோ) உரிமையாளர்கள்/சாரதிகள் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்

முக்கிய குறிப்பு : இதுவரை சங்கத்தில் பதிவு செய்யப்படாத ஓட்டோ உரிமையாளர்கள்/சாரதிகள் அனைவரும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்

6459



## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

**மணிசாமி P.T.R**

**பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா**

**யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,**

இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]



## சுவாமி விவேகானந்தர் ஜயந்தியை ஒட்டிய
## ஆன்மீக எழுச்சி விழா-2003



இடம்:துர்க்கா மணிமண்டபம்
காலம்: நாளை 18.01.2003 காலை 9.30 மணி

தலைவர்: இ. சிவராமலிங்கம் அவர்கள்
(முன்னாள் உப அதிபர்,யா/இந்துக் கல்லூரி)

பிரதம விருந்தினர் தவத்திரு சுவாமி ஆத்மகனானந்தா அவர்கள்
(தலைவர்,இராமகிருஷ்ணமிஷன்,கொழும்பு)

### நிகழ்ச்சி நிரல்

மு.ப. 9.30 : சுவாமியின் திருஉருவப்படம் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இருந்து வீதி வலம் வருதல்
மு.ப. 9.45 : மங்கள விளக்கேற்றல்
மு.ப. 9.50 : இறைவணக்கம்
மு.ப. 10.00 :சுவாமிவிவேகானந்தர் கீதம்
(யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள்)
மு.ப. 10.10 வரவேற்புரை
மதுரகவி காரை M.Pஅருளானந்தன்
மு.ப. 10.15 :ஆசியுரை
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சேமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

### விஷேட சொற்பொழிவுகள்

மு.ப. 10.20 : ''ஜீவசேவையே சிவசேவை''
(சுவாமி சித்ரூபானந்தா சாரதா சேவாச்சிரமம்,பருத்தித்துறை)
மு.ப. 10.40 : ''சுவாமி விவேகானந்தரின் சமூகவியல் தத்துவங்கள்''
திரு.இ.இராஜமகேந்திரம்,இராமகிருஷ்ணாலயம்,திருநெல்வேலி.
மு.ப. 11.00 : சிறப்புச் சொற்பொழிவு
சுவாமி ஆத்மகனானந்தா அவர்கள்
மு.ப. 11.30 : கவியரங்கு ''விடியலைத் தேடி''
தலைமை மதுரகவி காரை M.P.அருளானந்தன
மு.ப. 12.20 : பட்டிமண்டபம்
சுவாமி விவேகானந்தர் கண்ட ஆன்மீக மறுமலர்ச்சிமிக்க இந்து இளைஞன் தோன்றிவிட்டான்! தோன்றவில்லை!
தலைமை-சைவப் புலவர் கந்த.சததியதாசன்
பி.ப. 1.00 : நன்றியுரை
குணராஜா நக்கீரன்

குறிப்பு:சுவாமி விவேகானந்தரின் உருவப்பட நாட்காட்டிகள், வாழ்த்து மடல்களை சிறு அன்பளிப்பை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

5632 தரிசனம் யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை (14.01.2003) செவ்வாய்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற வீ.எம்.கணபதிப்பிள்ளை (நிறுவுனர், **V.M.K Jewellers**) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், ஜெயலட்சுமி (**Canada**), புலேந்திரன் (உரிமையாளர்.**V.M.K Jewellers**), காலஞ்சென்ற குலேந்திரன் (உரிமையாளர், **V.M.K Jewellers**), சீதாலட்சுமி (**Canada**), ராதாலட்சுமி (**Canada**) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்ரமணியம் (முன்னாள் பெறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), **Dr**.யோகேஸ்வரன்(**Canada**), தினகரன் (**Canada**) ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் அதிபர் யா/ விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை), தர்மேந்திரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர், நீர்ப்பாசனத் திணைக்களம் **Canada**), நிர்மலராணி, திகழ்மதி, யோகதாசன் (பொறியியலாளர், **Canada**), வசந்தகுமார் (பொறியியலாளர்,**Canada**) ஆகியோரின் மாமியாரும் அகல்யா ராஜகாரியர் (**UK**), கௌசல்யா ஸ்ரீசங்கர் (**Canada**), லாவண்யா, மீரா ராஜேந்திரன் (**Forut, Jaffna**), பார்த்தீபன் (**Leeds Metropoliton University, UK**), மாதங்கி, பிரசாந்த், கோகுல், கார்த்திகா அபராஜிதன், பிரசோதிக்கா, மேனகா (**University of Toranto, Canada**), ரேகா (**Canada**), கல்பனா(**Canada**), ஆதித்தன் (**Canada**) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், சுருதி (**UK**) யின் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்..

52, டச்சு வீதி
சாவகச்சேரி.

வீ.எம்.கே. குடும்பத்தினர்

**T.P . 070212989**

(6458ள)